From the People of Japan
Embassy of Japan

No. 20, Gregory's Road, Colombo 7, Sri Lanka
TEL: 94-11-269-3831~3, FAX: 94-11-269-8629
E-mail: cultujpn@co.mofa.go.jp /www.lk.emb-japan.go.jp

**ஊடக அறிக்கை**

பெப்ரவரி 13, 2014

## இலங்கையில் சமுதாயம் சார் அனர்த்த அபாயக் குறைப்பு தொடர்பான இயலுமையை கட்டியெழுப்பல் செயற்றிட்டத்திற்கு ஜப்பான் அ.சா.நி உதவித் தொகை கிடைத்துள்ளது.

கொழும்பில் அமைந்துள்ள தூதரக இல்லத்தில், 2014ஆம் ஆண்டு பெப்ரவரி மாதம் 12ஆம் திகதி 'சமுதாயம் சார் அனர்த்த அபாயக் குறைப்பு தொடர்பான இயலுமையைக் கட்டியெழுப்பல் செயற்றிட்டம்' என்ற செயற்றிட்டத்திற்கான உதவித்தொகை ஒப்பந்தத்தில் ஜப்பானிய தூதர் நொபுஹிட்டோ ஹோபோ மற்றும் சிவிக் ∴போர்ஸின் நிகழ்ச்சிப் பிரிவின் தலைவர் ஆள. மெகுமி குவானா ஆகியோர் கைச்சாத்திட்டனர். இந்த செயற்றிட்டத்தின் பெறுமதி 291,005 அமெரிக்க டொலர்களாகும் (அண்ணளவாக ரூ 37 மில்லியன்). ஜப்பானிய அரச சார்பற்ற நிறுவன செயற்றிட்டங்களுக்கான, ஜப்பான் உத்தியோகப்பூர்வ அபிவிருத்தி உதவி (ழுனுயு) என அழைக்கப்படும் உதவித் தொகை வழங்கல் நிகழ்ச்சியான உதவித் தொகையின் ஊடாக ஒரு வருட காலத்திற்கு இது நடைமுறைப்படுத்தப்படும். ஜப்பானின் வடகிழக்கு பிராந்தியத்தில் புனரமைப்பு மற்றும் புனர்வாழ்வு செயற்பாடுகளிலும், கடந்த காலங்களில் பிலிப்பைன்ஸ் மற்றும் தாய்லாந்து பகுதிகளில் அனர்த்தத்தில் பாதிக்கப்பட்ட பிராந்தியங்களில் அவசரகால மறுசீரமைப்பு செயற்பாடுகளிலும் ஜப்பானிய அனர்த்த உதவி அரச சார்பற்ற நிறுவனமான சிவிக் ∴போர்ஸ் ஈடுபட்டு வருகின்றது.

வெள்ளப்பெருக்கு, மண்சரிவு, வரட்சி மற்றும் முரண்பாடு போன்ற தொடர் அனர்த்தங்களை இலங்கை அனுபவித்து வருகின்றது. 2004ஆம் ஆண்டு இந்து சமுத்திரத்தை தாக்கிய சுனாமி அனர்த்தமானது நாட்டை அழிவுக்கு உள்ளாக்கியதுடன், அனர்த்த முகாமைத்துவ உதவிக்கான தேவையையும் சுட்டிக்காட்டியது. வறுமை மற்றும் முரண்பாடு போன்ற ஒன்றுடன் ஒன்று பொருந்திய காரணிகளுக்கு இடையில் முழுமையான மறுசீரமைப்பின் தேவையையும் வெளிப்படுத்தியது.

அனர்த்தத் தவிர்ப்பு மற்றும் அனர்த்த முகாமைத்துவத்திற்கு உள்;ர் சமுதாயங்களின் இயலுமைகளை பரவலாக்குவதும் இந்த செயற்றிட்டத்தின் நோக்கமாகும். செயற்றிட்டத்தின் முதல் வருடத்தில், இலங்கையில் அனர்த்த முகாமைத்துவத்தில் ஈடுபட்ட பிரதான நபர்களுக்கான தேசிய அளவிலான கருத்தரங்கினைத் தவிர, கொழும்பு மற்றும் திருகோணமலையில் இயலுமையை கட்டியெழுப்பல் செயலமர்வுகள் ∴ பயிற்சிகள் மற்றும்

வலையமைப்பு கூட்டங்கள் என்பன நடைபெறும். அனர்த்தங்களுக்கு உள்;ர் சமுதாயங்கள் பிரதிபலிக்கக் கூடிய வகையில் இயலுமையை மேம்படுத்துவதற்கும், துறைகளுக்கு இடையிலான ஒத்துழைப்பையும், பங்குபற்றுனர்களின் பிரயோக அனர்த்த முகாமைத்துவ திறன்களையும் வலுப்படுத்துவதற்கு இந்த செயற்றிட்டம் எதிர்பார்த்துள்ளது.

''அனர்த்த முகாமைத்துவம் என்பது அனைவரதும் பொதுவான அக்கறையாக இருக்கின்ற நிலையில், ஒட்டுமொத்த சமுதாயத்தின் அபிவிருத்தியிலும் இந்த செயற்றிட்டமானது சிறந்த சந்தர்ப்பமாக அமையும். அத்துடன், துறை சார்ந்த ஒத்துழைப்பின் ஊடாக மத்திய அரசாங்கத்தின் திட்டமிடலுக்கு உதவியாக இருக்கும். பல்வேறு அனர்த்தங்களினால் பாதிக்கப்பட்ட இலங்கையில் அனர்த்த முகாமைத்துவ மாதிரியை எம்மால் உருவாக்க முடியுமாயின், ஏனைய நாடுகளில் அனர்த்த முகாமைத்துவத்திற்கான பயனுள்ள அனுபவமாக இருக்கும். ஜப்பானிய அரச சார்பற்ற நிறுவனம் என்ற வகையில், வடகிழக்கு ஜப்பானின் புனரமைப்பு மற்றும் புனர்வாழ்வு பாடங்களை பயன்படுத்துவதற்கு நாம் விரும்புகின்றோம்'' என செயற்றிட்டம் குறித்து கருத்து தெரிவித்த ஆள. குவானா தெரிவித்தார்.